ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1637/23 - 2010 ජනවාරි 22 වැනි සිකුරාදා - 2010.01.22

*1637/23 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபை

**வான் சேவைகள் ஒழுங்குவிதிகள் 196 இன் கீழ் சிவில் விமான சேவைகள்**
**பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தல்**

*1955 ஆம் ஆண்டின் வான் சேவைகள் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உள்ளூர் கூலி விமான சேவைகள் மற்றும் வான் வேலைகளுக்கான விமான சேவைகள் நடாத்துதல் பொருட்டு விமான சேவைகள் நடாத்துதல் அத்தாட்சிப்பத்திரம்/கூலி விமான சேவைகள் நடாத்துதல் உரிமம் கோரி, கொழும்பு - 8, கொட்டா வீதி, கிறனியர் வீதி, இல. 29 இல் உள்ள கொஸ்மொஸ் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டெட்டிலிருந்து 2009, ஒற்றோபர் 7 ஆந் திகதியிடப்பட்ட விண்ணப்பம் ஒன்றை 2009, ஒற்றோபர் 7 ஆந் திகதியன்று நான் பெற்றுள்ளேன் என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். கொஸ்மொஸ் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் பின் குறிப்பிடப்படுவோர் என அறிவிக்கப்படுகின்றது:-*

*திரு. சஜின் டீ வாஸ் குணவர்தன*
*திரு. வஜிரா காலிங்க விஜயவர்தன*
*திருமதி ரியானா தயந்தி அந்தோனிஸ்*

*கொஸ்மொஸ் ஏவியேசன் (பிரைவேட்) லிமிட்டெட் திரு. வஜிரா காலிங்க விஜயவர்தன என்பவரை உத்தேச விமான சேவைகளை நடாத்துவதற்குப் பொறுப்பான பொறுப்பு முகாமையாளராக நியமித்துள்ளது.*

*மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரியின் முழுமையான விண்ணப்பத்தின் பிரதி ஒன்று எந்தவொரு காரியாலய தினங்களிலும், காரியாலய நேரங்களில் பார்வையிடக்கூடியதாய், கொழும்பு 3, காலி வீதி, இலக்கம் 64 இல் அமைந்துள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் கீழ் மாடியிலுள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*

*உத்தேச சேவைகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான விமான சேவைகள் நடாத்துதல் அத்தாட்சிப்பத்திரம், கூலி விமானசேவைகள் நடாத்துதல் உரிமம், வான் வேலைகளுக்கான விமான சேவைகள் நடாத்துதல் உரிமம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அனுமதிகளை வழங்குவதற்கு முன்னராக உத்தேச சேவைகளைப் பத்திரமாக, பாதுகாப்பாக, திறமையாக நடாத்துவதற்குத் தேவையான வல்லமையை விண்ணப்பதாரி உடையவர் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும், பொருத்தமான வான்சேவை ஒழுங்குவிதிகள், சர்வதேச விமான சேவைகள் அமைப்பின் சர்வதேச தரங்கள், விதந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் இந்த அலுவலகத்தினால் ஆக்கப்பட்ட சம்பந்தப்பட்ட உள்ளூர் தேவைப்பாடுகள் ஆகியவற்றிற்கு விண்ணப்பதாரி எவ்வளவிற்கு இணங்கியுள்ளார் என்பதைப் பரீட்சிப்பதற்காகவும், அத்தாட்சிப்படுத்தும் நடைமுறைகளை 2010, பெப்புருவரி 12 ஆந் திகதிக்குப் பின்னர் நான் ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளேன் என்பதைப் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.*

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் பற்றி விஞ்ஞாபனம் செய்ய விரும்பும் ஒருவர் தனது கருத்தைக் குறிப்பான அடிப்படையில் எழுத்துமூலம் மேற்படி திகதிக்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னராக அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகைய விஞ்ஞாபனத்தின் பிரதி ஒன்று சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டியதுடன் அவ்வாறு செய்தமை பற்றிய அத்தாட்சி ஒன்றை எனக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பராக்கிரம திசாநாயக்க,
பதில் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதான நிறைவேற்றும் அதிகாரி,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை.

இலங்கை சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபை,
இல. 64, காலி வீதி,
கொழும்பு 3,
2010, சனவரி 19.

2- 94

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.